## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 19.09.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள் :**

இது ரமலான் மாதம். நேற்றுதான் ஆரம்பித்ததுபோன்று இருக்கிறது. இப்போது ரமலானின் இரு பத்துகள் முடியவிருக்கின்றன. இன்னும் சில நாள்களில் கடைசி பத்து நாட்கள் தொடங்கி விடும். ரமலானின் முக்கியத்துவம் திருக்குர்ஆனிலும், ஹதீஸிலும் கூறப்பட்டுள்ளன.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

**ஹுவ ஷஹ்ருன் அவ்வலஹு ரஹ்மத்துன் அவ்ஸதுஹு மக்ஃபிரத்துன் ஆகிருஹு இத்கும் மினன்னார்** – இம்மாதத்தின் முதல் பத்து நாட்கள் ரஹ்மத்தின் நாட்கள். அதன் நடுப்பத்து நாட்கள் மன்னிப்பிற்கு காரணமாக அமைகின்றன. கடைசி பத்து நாட்கள் நரகத்திலிருந்து விடுதலை அளிக்கும் நாட்களாகும். இந்த ஹதீஸ் சற்று கூடுதல் குறைவுடன் பல்வேறு ஹதீஸ்களில் காணப்படுகின்றன. எல்லாவற்றிலும் இந்த மூன்று பத்துகளின் முக்கியத்துவம் விளக்கப்பட்டுள்ளது.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று நாம் இரண்டாவது பத்தில் நுழைந்துள்ளோம். அதில் கூட இன்னும் இரண்டு நாட்களே உள்ளன. பிறகு இன்ஷா அல்லாஹ் மூன்றாவது பத்து நாட்கள் தொடங்கும். அந்த பத்து நாட்கள் பற்றி அறிவிப்புகளில் கூறப்பட்டபடி நரகத்திலிருந்து விடுதலை அளிக்கக்கூடிய பத்து நாட்களாகும். இப்போது மக்ஃபிரத்தின் பத்து நாட்கள் மற்றும் கடைசி பத்து நாட்கள் பற்றி சிறிது விளக்குவேன்.

மக்ஃபிரத், தவ்பா, நரக நெருப்பிலிருந்து விடுதலை பற்றிய பல்வேறு அறிவிப்புகளில் நமக்கு கவனமூட்டப்பட்டுள்ளது பற்றி விளக்குவேன். இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு) என்பது அல்லாஹ் மனிதனுக்கு தானும் கட்டளையிட்டு, நபிமார்கள் மூலமும் வலியுறுத்தியுள்ள முக்கிய கட்டளையாகும். இறைவன் நபிமார்களிடம் மூஃமின்களுக்கு இஸ்திக்ஃபார் பற்றி கவனமூட்டுமாறு கூறினான். இறைவன் மூஃமின்களைப் பார்த்து, **வஸ்தக்ஃபிருல்லாஹ்** – நீங்கள் இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு) கேளுங்கள் என்று கட்டளையிட்டதுடன் தொடர்ந்து கூறினான். **இன்னல்லாஹ கபூருர் ரஹீம்** – நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிக்கக்கூடியவன். மென்மேலும் கருணை காட்டக்கூடியவன். எனவே, அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலம் இவ்வாறு அறிவிக்கச் செய்துள்ளான். உமது சமுதாயத்திடம் கூறுவீராக. இம்மாதம் மன்னிப்பின் மாதமாகும். என்னிடம் மன்னிப்பு கேளுங்கள். நான் மன்னிப்பேன். மேலும் நான் கருணை காட்டுபவனும் ஆவேன். ஆக, அல்லாஹ் மன்னிக்கவும் செய்கின்றான். ஒரு மனிதன் அல்லாஹ்வின் முன் மன்னிப்புக் கேட்டு குனிந்தும் இறைவன் அவனை மன்னிக்காமல் போவது சாத்தியமே இல்லாததாகும்.

உண்மையில் ரஹ்மத் (அருள்), மன்னிப்பு, நரக விடுதலை இவையெல்லாம் ஒரு முடிவின் பல படித்தரங்களாகும். அதுவே ஷய்த்தானை விட்டு தூர விலகுதல், இறை திருப்தி, இறை நெருக்கம் பெறுதல் என்ற படித்தரங்களாகும். அல்லாஹ்வின் ரஹ்மத் மூலமே நோன்பு வைக்க நல்வாய்ப்பு கிடைக்கிறது; இபாதத் செய்ய வாய்ப்பு கிடைக்கிறது. அவனது திருப்தியைப் பெறுவதற்காக அனுமதிக்கப்பட்ட வேலைகளையும் விட்டுவிட வாய்ப்பு கிடைக்கிறது. அல்லாஹ் எல்லா பழைய தவறுகளையும் மன்னித்து, அம்மனிதனை தனது ரஹ்மத்தின் போர்வையால் அணைத்துக் கொள்கிறான். இந்த மக்ஃபிரத்தும் இறைவனது ரஹ்மத் மூலமே கிடைக்கிறது. மக்ஃபிரத்திற்குப் பிறகு இறைவனது ரஹ்மத் முடிவதில்லை. மாறாக, மக்ஃபிரத் தவ்பாவின் தொடராகும். அல்லாஹ்வின் ரஹ்மத் மற்றும் கருணையால் தொடர்ந்து நடைபெறுகிறது. இது தொடரும் வரை மனிதனும் களங்கமற்ற முறையில் இறைவனுக்காக ஆவதற்கு முயற்சி செய்கிறான். பிறகு அவனிடமிருந்து இறை திருப்தியை ஈர்க்கும் செயல்கள் வெளிப்படுகின்றன. இறைவன் கட்டளையிட்ட அமேல சாலிஹ் – நற்செயல்களை அவர் செய்யத் தொடங்கி விடுகிறார். தொடர்ந்து

இஸ்திக்ஃபார், மன்னிப்பு மற்றும் பாவத்திலிருந்து தப்புவதற்கு முயற்சியும் செய்தால், அல்லாஹ்வின் ரஹ்மத்திலிருந்து அருள் பெற்று பிறகு மக்ஃபிரத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவர் ஈடேற்றம் அடைந்து விட்டார்.

பிறகு அவரை நெருப்பு எப்படி சுடும்? எனவே ரமலானின் மூன்று பத்து நாட்களும் இங்கு விளக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் அடுத்ததுடன் இணைக்கப்பட்ட செயல்களைச் செய்ய வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டவையாகும். ரமலான் மாதத்தில் சஹருக்கும், இப்தாரிக்கும் நடுவில் உண்ணாமல் இருப்பதால் மட்டும் அல்லாஹ்வின் ரஹ்மத், மன்னிப்பு, நரக நெருப்பிலிருந்து விடுதலை ஆகிவற்றிற்கு உரியவராக ஆகிவிட முடியாது.

எனவே, மனிதன் இவற்றைப் பெறுவதற்காக இறைவன் ரமலான் மாதத்தில் குறிப்பிட்ட சூழ்நிலையை ஏற்படுத்தித் தந்துள்ளான். இதில் ஷய்த்தானை விட்டு விலகி இறைவன் மனிதனை நெருங்குகிறான். பிறகு இதனைப் பெறுவதற்கு அடியான் அதிகமதிகம் முயற்சி செய்யவும் வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

திருக்குர்ஆனில் இறைவன் இதனைக் கூறுகிறான். அடியானே என்னிடம் நம்பிக்கை இழக்க வேண்டாம். நான் ரஹீமும், மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவன், கரீம் (சிறந்தவன்), சத்தார் (குறைகளை மறைப்பவன்), கஃப்பார் (பாவங்களை மன்னிப்பவன்), என்னை விட மிக அதிகமாக உங்ளுக்கு வேறு எவனும் கருணை காட்ட மாட்டான். உங்களின் தாய் தந்தையர்களை விட அதிகமாக என்னிடம் அன்பு காட்டுங்கள். நான் அவர்களை விட அதிகமாக அன்பு காட்டுபவன். என்னிடம் வருவீர்கள் எனில், உங்களது அனைத்து பாவங்களையும் மன்னித்து விடுவேன். நீங்கள் தவ்பா (பாவமன்னிப்பு) கேட்டால் நான் ஏற்றுக் கொள்வேன். நீங்கள் மெதுவாக என்னை நோக்கி வந்தால் நான் விரைவாக வருவேன். எவர் என்னை தேடுவாரோ அவர் என்னை கண்டுகொள்வார். எவர் என் பக்கம் திரும்புவாரோ அவர் எனது வாசல் திறந்திருப்பதைக் காண்பார். நான் தவ்பா செய்பவரின் பாவங்களை மன்னிக்கிறேன். அது மலையை விட அதிகமாக இருந்தாலும் சரியே. உங்கள் மீது எனது கருணை மிக அதிகமாகும். ஏனெனில் நீங்கள் எனது படைப்புகள் ஆவீர். நான் உங்களைப் படைத்தவன். எனவே, உங்கள் அனைவரின் மீதும் எனது கருணை சூழ்ந்துள்ளது.

எனவே, அல்லாஹ் எவ்வளவு அருள் செய்பவன். பொதுவான நிலையை விட ரமலானில் அது எந்த அளவு பொழிகிறது என்றால் அதனை எவரும் மதிப்பிட இயலாது. எனவே, நம்மில் கடந்து சென்ற ரமலானின் நாட்களில் அவனது ரஹ்மத் மற்றும் மக்ஃபிரத்திலிருந்து பயனடைந்தவாரே சென்றவர் பேறு பெற்றவராவார். இப்போதும் அருள் பெற வாய்ப்பு உள்ளது. மனிதன் பணிவுடன் அவன் பக்கம் குனியும்போது, நான் கருணை காட்டுவது போன்று எவரும் கருணை காட்டுவதில்லை என்று இறைவன் கூறுவதாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். எவர் என்னைத் தேடுவாரா அவர் என்னை கண்டு கொள்வார். எனவே, அல்லாஹ்வின் ரஹ்மத்தைப் பெறுவதற்காக மக்ஃபிரத்தைப் பெறுவதற்காக என்னை தேடுவது அவசியமானதாகும். மேலும் இந்நாட்களில் குறிப்பாக என்னைத் தேடுபவர் மற்ற நாட்களிலும் என்னைத் தேட வேண்டும். ஆனால், இந்நாட்களில் குறிப்பாக எனது வாசல் திறந்திருக்கக் காண்பார். நான் மறைந்திருக்கவில்லை. அருகில் இருக்கிறேன். எனது வாசலும் திறந்துள்ளது.

திருக்குர்ஆனில் ரமலானின் நோன்பு குறித்து கவனமூட்டப்பட்டுள்ளது. அந்த வசனத்தில் அல்லாஹ் **இன்னீ கரீப்** – நான் அருகில் இருக்கிறேன் என்ற சொல்லையும் பயன்படுத்தியுள்ளான். இறைவன் அருகில் இருக்கிறான். வாசலும் திறந்துள்ளது. என்னை நோக்கி வாருங்கள். எனது மக்ஃபிரத்தின் அடைக்கலத்தில் வாருங்கள். பொதுவான நாட்களில் கூட எனது அடியார்கள் மீது எனக்கு கோபம் மிகக் குறைவானதும் கருணை மிக அதிகமானதும் ஆகும். இந்நாட்களில் இன்னும் அதிகம் ரஹ்மத்தின் வாயிலைத் திறக்கின்றேன். பாவமன்னிப்பால் மூடுகிறேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

**ல வஜதல்லாஹ தவ்வாபன் ரஹீம்** – அல்லாஹ்வை அதிகம் பாவமன்னிப்பு வழுங்குபவனாகவும், மீண்டும் மீண்டும் ரஹ்மத் செய்பவனுமாகக் காண்பார். இவ்வாறு கூறி இறைவன் தனது அனுதாபத்தை வெளிப்படுத்துவான். நான் ரஹீமும், கரீமும் ஆவேன். தவ்பாவை ஏற்றுக் கொள்வேன். எனது மக்ஃபிரத்தின் போர்வையில் போர்த்துவேன். இதற்குப் பிறகும் கூட மனிதன் தனது நஃப்ஸின் மீது அநீதியிழைப்பவனாகவே உள்ளான். பாவமன்னிப்புக் கேட்பதில்லை. எனவே, இறைவன் மீண்டும் மீண்டும் பாவமன்னிப்புக் கேட்பதை வலியுறுத்துவது தெரிவிப்பது என்னவென்றால், அடியானின் இஸ்திக்ஃபார் அல்லாஹ்வின் ரஹ்மத்தை விரைவாக ஈர்க்கிறது. இஸ்திக்ஃபார் பயனளிக்காது என்று சொல்பவர் தவறிழைக்கின்றார்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸில் கூட உள்ளது. மனிதன் நடந்து வந்தால் இறைவன் அவனை நோக்கி ஓடி வருகின்றான்.

இறைவன் திருக்குர்ஆனில் கூறுகின்றான். **வல்லதீன ஜஹது ஃபீனா ல நஹ்தியன்னஹும் சுபுலனா** – எவர் நம் வழியில் முயற்சி செய்கின்றாரோ அவருக்கு நம்மை அணுகும் வழியை காட்டுகிறோம்.

இஸ்திக்ஃபார் இறைவனை நோக்கி செல்வதற்குரிய ஒரு வழியாகும். இஸ்திக்ஃபார் என்றால் என்ன? ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளில் கூறுகின்றேன். இஸ்திக்ஃபாரின் அசலான உறுதியான பொருள் மனிதத் தன்மையின் எந்த பலவீனமும் என்னிடம் வெளிப்பட்டு விடக்கூடாது என்று இறைவனிடம் விண்ணப்பித்தல் ஆகும். மனித இயல்புக்கு இறைவன் தனது உதவி கொண்டு ஆற்றல் தருமாறு வேண்டுதல் ஆகும். அவனது உதவியால் அவனது ஆதிக்கத்திற்குள் வந்து விடுவதற்கான விண்ணப்பம் ஆகும். எனவே, இஸ்திக்ஃபார் செய்பவரின் இயல்பான பலவீனத்தை மூடுவதற்காக துஆ செய்வதற்கு இஸ்திக்ஃபார் என்று பெயர். மனித பலவீனம் வெளிப்படாமல் இருப்பது சாத்தியமேயில்லை. மனிதன் பலவீனமானவன். அவனது பலவீனம் வெளிப்படவே செய்கிறது. ஷய்த்தான் எப்போதும் தாக்குதல் நடத்த தயாராகவே இருக்கின்றான். மனிதன் ஆன்மீகரீதியாக பலவீனமாகும்போது ஷய்த்தான் உடனே தாக்குதல் தொடுக்கிறான். எனவே தொடர்ந்து மனிதன் இஸ்திக்ஃபார் செய்து கொண்டிருக்க வேண்டும். தொடர்ந்து இறை திருப்தியைப் பெற முயற்சி செய்ய வேண்டும். அப்போது இறைவனது உதவியின் வட்டத்திற்குள் மனிதன் வர முடியும்.

**ஓரிடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

“மனிதனின் இரத்தம் ஓடும் இடங்கள் அனைத்திலும் ஷய்த்தான் ஓடுகிறான்.”

எனவே, இந்த மன்னிப்பின் நாட்கள் நமக்கு பயன் தருவதற்கு இந்த நாட்களில் பெற்ற அருளை நம் வாழ்வின் பகுதியாக்க வேண்டும். நமது பலவீனத்தைக் கவனத்தில் கொண்டு இஸ்திக்ஃபாரிலிருந்து பயன்பெற்று வர வேண்டும். அல்லாஹ்வின் வட்டத்தினுள் வர வேண்டும். இவ்வாறு சில நோய்கள் சிகிச்சை பெற்று வரும்போது கூட குணமாவதில்லை. சற்று மறைந்திருந்து ஏதாவது ஒரு வேளையில் திரும்பத் தாக்குகிறது. இடைப்பட்ட காலத்தில் வெளிப்படுவதில்லை. நோய் வந்த பிறகு உடல் பலவீனமாக இருந்தால் அந்த நோய் திரும்ப எழுந்து தாக்குதல் தொடுக்கிறது. இதைப் போன்றே மனிதனின் நல்லொழுக்க ஆன்மீக நோய்களும் உள்ளன. மனிதன் அல்லாஹ்வின் கட்டளையின்படி முழுவதுமாக செயல்பட முயற்சி செய்யவில்லை என்றால் இஸ்திக்ஃபார், தவ்பா மூலம் அந்நோய்களை அடக்கி வைக்கவில்லையென்றால் அந்த நோய் திரும்பவும் தனது தாக்கத்தைக் காட்டி திரும்பவும் பழைய நிலைக்கு மனிதனைக் கொண்டுவர முயற்சிக்கின்றது. எனவே, இஸ்திக்ஃபார் என்பது வெறும் பாவமன்னிப்பு மட்டுமல்ல. வருங்கால பாவத்திலிருந்து தப்புவதும் ஆகும். எனவே, இது அவனது கருணையாகும். தொடர்ந்த முயற்சிகள் மூலம் இஸ்திக்ஃபாரின் பக்கம் கவனம் செலுத்த அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். பிறகு வருடம் ஒருமுறை

ஒட்டுமொத்த நிகழ்வாக அதனைத் தொடரச் செய்துள்ளான். இவ்வாறு நாம் இறைவனது அளவற்ற நெருக்கத்தைப் பெற ஏற்பாடு செய்துள்ளான். ஒருமுறை அவனது வட்டத்திற்குள் வரவும் பிறகு அதிலிருந்து மேலே முன்னேறிக் கொண்டு செல்லவும் ஏற்பாடு செய்துள்ளான். இறைவனது இந்த இலக்கை மனதில் கொள்வோம் எனில் நமது பலவீனங்கள் அகன்று, இந்த நடுப்பத்து நாட்களில் இறைவனின் அருகில் சென்று விடுவோம். மாறாக, இம்மாதத்தில் நோன்பு வைத்து கொஞ்சம் நஃபில் தொழுது பிறகு வருடம் முழுவதும் ரமலானில் நாம் என்ன செய்தோம் என்பதையே மறந்து விட்டோம் எனில் பிறகு இது மக்ஃபிரத்தின் பத்து நாட்களாக இருக்காது. பிறகு இந்த மாதத்திலிருந்து பயனடைவதற்கும் முற்றிலும் வெற்றிகரமாக இதனை கடந்து செல்வதற்கும் முதலில் நாம் முன்னர் நிகழ்ந்த தவறுகளை திரும்பச் செய்யாமல் இருக்க வேண்டும். இதுவே உண்மையான இஸ்திக்ஃபார் ஆகும். இத்தகைய தவ்பா, இஸ்திக்ஃபாரைத்தான் இறைவன் விரும்புகிறான். இஸ்திக்ஃபார், தவ்பா இந்த இரண்டு சொற்களில் என்ன வித்தியாசம் என்பதைக் கூறுகிறேன். திருக்குர்ஆனைப் படிப்பவர்கள் இந்த இரண்டு வார்த்தைகளையும் இறைவன் பயன்படுத்தி இருப்பதை அறிய முடியும். இறைவன் கூறுகிறான். **வ நஸ்தக்ஃபிரு ரப்பகும்** – நீங்கள் உங்கள் ரப்பிடம் இஸ்திக்ஃபார் செய்யுங்கள். பிறகு அவன் பக்கம் தவ்பா செய்தவாறு குனியுங்கள்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.**

நினைவில் கொள்ளுங்கள். இரண்டு விஷயங்கள் இந்த உம்மத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஒன்று, ஆற்றலைப் பெறுவதற்காகவும், மற்றொன்று பெற்ற ஆற்றலைப் பயன்படுத்துவதற்காகவும் இவை வழங்கப்பட்டுள்ளன. அதாவது, முதல் விஷயம் இஸ்திக்ஃபார் என்ற ஒரு ஆயுதம் ஆகும். அதனைக் கொண்டு மனிதன் ஷய்த்தானுடன் போரிடலாம். இரண்டாவது, அந்த ஆயுதத்தை பயன்படுத்துவதாகும். அதாவது தவ்பாவின் மூலம் ஷய்த்தானை விரட்டுவதாகும். நமது நஃப்ஸ் நம்மை மிகைத்து விடாமல் செய்வதாகும். நற்செயல்கள் உண்மையில் இறைவன் நமக்கு கட்டளையிட்ட முயற்சிகளாகும். அதுவன்றி இஸ்திக்ஃபார் பயன் அளிக்காது. மன்னிப்புக் கிடைப்பதும் சாத்தியமில்லை.

ஒரு நோன்பாளி தொழுகிறார்; நோன்பு வைக்கிறார்; திருக்குர்ஆன் ஓதுகிறார்; முடிந்தவரை திருக்குர்ஆன் தர்ஸ் கேட்கின்றார். அதனை அவர் நடைமுறைப்படுத்த வில்லையென்றால், அல்லாஹ்வின் கட்டளையின்படி செயல்படவில்லையென்றால் எந்தப் பயனும் இல்லை. உதாரணமாக, இறைவன் சகோதரரின் உரிமையை வழங்குவது பற்றி கூறுகிறான். அதனை செய்யாத வரை உண்மையான இஸ்திக்ஃபார், தவ்பா செய்பவராக முடியாது. இஸ்திக்ஃபார் மூலம் இறைவன் தந்த ஆற்றலை சரியான முறையில் பயன்படுத்தும்போதுதான் சரியான பயன் ஏற்படும்.

அல்லாஹ் பாவங்களை மூடுவதற்கான ஆற்றல் தந்துள்ளான். பாவங்களை அகற்ற வாய்ப்புத் தந்துள்ளான். இஸ்திக்ஃபார் செய்தவாறு மனிதன் தனது உள்ளத்தை தூய்மையாக்கும்போது உடனேயே அதனை நன்மையால் நிறைக்க முயற்சி செய்ய வேண்டும். தன்னிடம் தூய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால் உள்ளம் என்ற பாத்திரம் நன்மையின்றி காலியாக இருந்தால் ஷய்த்தான் மீண்டும் தீமைகளால் நிறைத்து விடுவான். எனவே, இறைவன் கூறினான். **யா அய்யுஹல்லதீன ஆமனூ தூபூ இலல்லாஹு தவ்பத்தன் நஸீஹா** – ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்விடம் களங்கமற்ற முறையில் இஸ்திக்ஃபார் செய்யுங்கள். ஒருவர் ஒருமுறை தூய்மையுடன் தவ்பா செய்து விட்டால் பிறகு உள்ளத்தை நன்மையால் நிரப்பிக் கொண்டே செல்ல வேண்டும். அல்லாஹ்வுக்குள்ள உரிமையையும் அடியாருக்குள்ள உரிமையையும் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். தூய்மையான தவ்பாவிற்காக என்ன செய்வது அவசியம்? இதற்கு மூன்று விஷயங்களைக் கூறி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழிகாட்டுகின்றார்கள்.

முதலாவது விஷயம், ஒவ்வொரு தீய விருப்பமும் முதலில் மனித மூளையில் உருவாகிறது. எனவே, ஒருவர் தனது மனதை தூய்மையாக்க முயலாதவரை தவ்பா களங்கமற்றதாக இருப்பதில்லை. வெறும்

வாயளவில் **அஸ்தக்ஃபிருல்லாஹ ரப்பி மின் குல்லி ஸன்பின் வஅத்தூபு இலைஹி** என்று கூறுவது எந்த பயனும் அளிக்காது. மனதும் அதனுடன் செல்லாத வரை வாயளவிலான வார்த்தை பயன் தராது.

இரண்டாவது விஷயம், பாவத்திற்காக தமது உள்ளத்தில் வெட்கமும், வேதனையும் அடைதல், பிறரது உரிமையைப் பறித்தல், ஒருவரைப் பார்த்து தீய வார்த்தைகள் பேசுதல் இவை தவ்பாவின் மூலம் தூர விலகக்கூடியவையாகும். சிலர் தமது சகோதரரின் உரிமையைப் பறிக்க முயற்சி செய்கிறார். மனைவி கணவன் ஒருவரையொருவர் ஏமாற்ற முயற்சி செய்கின்றனர். பிறகு அனைத்து வகையான பாவங்களை செய்து விட்டு நாம் தவ்பா செய்கிறோம்தானே; இது போதுமானதாகும் என்று கருதுவது தவறான எண்ணமாகும். உண்மையான தவ்பா என்பது சிறு தவறு ஏற்பட்டாலும் மனிதனுக்கு அதற்காக வெட்கமும், வேதனையும் ஏற்பட வேண்டும்.

மூன்றாவது விஷயம், தவ்பா செய்தவரின் எண்ணம் உறுதியாக இருக்க வேண்டும். நான் எல்லா வகையான தீமையை விட்டும் விலகி விடுவேன். பிறகு ரமலான் வந்து விட்டது. இதில் கொஞ்ச காலம் பாவம் செய்யாமல் இருப்போம். மற்றவரின் உரிமையை பறிப்பதை விட்டும் விலகியிருப்போம். ரமலானுக்குப் பிறகு செயல்படும் மனிதனின் உள்ளங்களின் நிலையை அல்லாஹ் அறிபவன். அத்தகைய மக்களின் மக்ஃபிரத்தின் பக்கம் இறைவன் கவனம் செலுத்துவதில்லை. ஏனெனில் அவன் தெளிவாக கூறி விட்டான். நீங்கள் **தவ்பதன் நஸீஹா** – தூய்மையான பாவமன்னிப்புக் கோருங்கள். இறைவனை ஏமாற்ற முடியாது.

**<u>ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

தவ்பா செய்பவர் இந்த மூன்று விஷயங்களையும் தமக்குள் உருவாக்கும்போது அவருக்கு இறைவன் உண்மையான தவ்பா செய்யும் வாய்ப்பை வழங்குவான். எந்த அளவுக்கெனில் அவரது தீமைகள் முற்றாக அழிந்து, அக்லாகே ஹஸனா (நற்செயல்கள்) அவ்விடத்திற்கு வந்து விடும். இந்த அக்லாகிற்கு இறைவனே ஆற்றல் வழங்குகிறான். அவனே எல்லா நல்லியல்புகளின் உரிமையாளன் ஆவான்.

தீமைகளை நன்மையாக மாற்றுகிற அந்த உண்மையான தவ்பாவைப் பற்றி இறைவன் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

**மன் தாப வ ஆமினு வஅமில சாலிஹன் ஃபவுலாயிக யுபத்திலுல்லாஹி ஸய்யாதிஹிம் ஹஸனா. வகானல்லாஹி கபூருர் ரஹீமா** – எவர் தவ்பா செய்து ஈமான் கொண்டு நற்செயலும் செய்வாரோ அவரது தீமைகளை அல்லாஹ் நன்மையாக மாற்றி விடுவான். இறைவன் மிகவும் மன்னிப்பவனும், மீண்டும் மீண்டும் கருணை காட்டுபவனும் ஆவான். இந்த புரட்சியை நாம் ஏற்படுத்த வேண்டும். முதலில் உள்ளத்தை தூய்மைப்படுத்த இஸ்திக்ஃபாருடன் முயற்சி செய்ய வேண்டும். பிறகு சின்னஞ்சிறு பாவங்களுக்காகவும் வெட்கப்பட வேண்டும். பிறகு உறுதியான எண்ணம் கொள்ள வேண்டும். எவ்வளவு பேராசை ஏற்பட்டாலும், தீமையின் பக்கம் செல்லமாட்டேன். எனது ஒவ்வொரு செயலையும் இறைவனது விருப்பத்திற்கேற்ப மாற்ற முயற்சி செய்ய வேண்டும். இந்த நோன்பு நமக்கு கைகூடும் போது மனிதன் சகிப்புத்தன்மை, தியாகம் ஆகியவற்றைச் செய்வற்கான முயற்சியைத் தொடங்குவான். பிறகு நோன்பின் பரக்கத்திலிருந்து பயன்பெற இம்முயற்சி பயன் அளிக்கும்.

பிறகு இந்த மன்னிப்பின் பத்து நாட்கள் நமக்கு மன்னிப்பிற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரும். வெறும் நடுப்பத்து நாட்களில் மட்டுமல்ல. வரக்கூடிய பத்து நாட்களிலும் மன்னிப்பிற்கான வாய்ப்பை ஏற்படுத்தும்.

ரமலான் மாதம் மட்டும் அல்ல. வரக்கூடிய ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வருடமும் ஏன் வருடத்தின் ஒவ்வொரு நாளும் நமக்கு பாவமன்னிப்பைப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தரும். எனவே, நாம் இதனைப் புரிந்து அமல் செய்ய முயற்சி செய்ய வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டலின் பின் உள்ள இவ்விஷயங்களை புரிய வேண்டும். நடுப்பத்து நாட்கள் மன்னிப்பை பெற்றுத் தரக்கூடியது என்று அன்னர் கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் உண்மையான உள்ளத்துடன் இறைவன் பக்கம் திரும்புகிறான். ஆனால் இறைவன் மனிதன் பக்கம் திரும்பவில்லை என்பதை அறிவு எவ்வாறு ஏற்றுக் கொள்ளும். ஏனெனில் இறைவன் மிகவும் அன்பும் அருளும் உடையவன் அடியானின் பக்கம் அவன் மிக அதிகமாக திரும்புகிறான். எனவே, திருக்குர்ஆனில் இறைவனின் பெயர் தவ்வாப் – மிகவும் அருளுடன் கவனம் செலுத்துவன் ஆவான். எனவே, அடியானின் திரும்புதல், வெட்கம், பணிவு, உருக்கம் ஆகியவற்றுடன் ஏற்படுகிறது. இறைவன் மனிதனை நோக்கி செய்யும் திரும்புதல், ரஹ்மத், பாவமன்னிப்புடன் ஏற்படுகிறது. எனவே, உண்மையான இஸ்திக்ஃபார் செய்பவர்கள், களங்கமற்ற முறையில் தவ்பா செய்பவர்கள், அருளுக்குரிய ரமலான் மாதத்தில் அதன் தாக்கத்தை தமக்குள் ஏற்றுக் கொண்டவாறு இறைவனது மக்ஃபிரத் மற்றும் ரஹ்மத்தின் காட்சியை காணக் கூடியவர்கள் நற்பேறு பெற்றவர்களாவர். சோம்பல் காணப்பட்டால் அது அடியானிடம் காணப்படுகிறது. தவறு மனிதனிடம் காணப்படுகிறது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அடியானை நோக்கி இறைவன் மிகவும் அதிகமாக திரும்புகிறான். மனிதன் தன் பக்கம் வர வேண்டும். அவனது தவ்பாவை ஒப்புக் கொள்ள வேண்டும் என்றுதான் இறைவனே விரும்புகிறான். வல்லாஹி யுரீது அன்யதுப அலைஹிம் என்று இறைவன் கூறுகின்றான். உங்கள் மீது கருணை காட்டி உங்கள் தவ்பாவை ஏற்றுக் கொள்வதற்காக உங்கள் பக்கம் திரும்ப இறைவன் விரும்புகின்றான். பிறகு மனிதன் ஒரு வேலையை தான் விரும்பும்போது அதனை செய்யும்போது அதனை இறைவன் ஏற்காமல் இருப்பது எப்படி சாத்தியமாகும்?

எனவே மனிதனின் வேலை இஸ்திக்ஃபார் செய்தவாறு அவன் பக்கம் குனிய வேண்டும். பிறகு இறைவன் அவன் பக்கம் எவ்வாறு வருகிறான் என்று பார்க்க வேண்டும். பிறகு இம்மாதத்தில் அல்லாஹ்வுடைய ரஹ்மத், மன்னிப்பு முன்னரை விட அதிகமாக அடியானின் மீது இறங்குகிறது. நாம் அதிலிருந்து பலன்பெற முடிந்தவரை முயற்சி செய்ய வேண்டும். எப்போதும் அல்லாஹ்வின் கூற்றை மனதில் கொள்ள வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: **வமன் தாப வஅமில சாலிஹன் ப இன்னஹு யுதூபு இலல்லாஹி மதாபா.** எவர் தவ்பா செய்து நற்செயலும் செய்வாரோ அவரே இறைவனிடம் உண்மையான தவ்பா செய்தவாறு குனிபவர் ஆவார்.

எனவே, உண்மையான தவ்பாவுடன் நற்செயல் செய்வதும் அவசியமாகும். நடுப்பத்து நாட்களை மன்னிப்பதற்காக ஆக்கியிருப்பதாக அல்லாஹ் கூறுகிறான். இஸ்திக்ஃபார் மற்றும் நற்செயலுடன் நாம் கடைசி பத்தில் நுழைவோம் எனில், பிறகு அல்லாஹ்வின் கூற்றிற்கேற்ப கடைசி பத்து நாட்கள் நரகத்திலிருந்து விடுதலை தருகிற பத்தாக அமையும்.

**இறைவன் ஓரிடத்தில் கூறுகின்றான்:**

**வமா கானல்லாஹி முஅஸ்ஸிபஹும் வஹும் யஸ்தக்ஃபிரூன்** – ஒருவன் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அவருக்கு அல்லாஹ் தண்டனை தருவதில்லை. அல்லாஹ் பல்வேறு வகைகளில் நமக்கு புரிய வைத்துக் கொண்டிருக்கிறான். முற்கால மக்களின் சம்பவங்கள் மூலமும், நபிமார்களின் சம்பவங்களின் மூலமும் இறைவன் விளக்கியுள்ளான். நான் முன்னர் நடந்து கொண்டது போன்றே இனியும் நடந்து கொள்வேன். மனிதன் குறிப்பான கவனத்துடன் அல்லாஹ்வுக்குள்ள உரிமையையும் அடியாருக்குள்ள உரிமையையும் வழங்கி தமது வணக்கத்தையும் பாதுகாத்து வந்தால், நஃபில்கள் செய்து, இஸ்திக்ஃபார் செய்து வந்தால், மற்ற நற்செயல்களையும் செய்ய முயற்சி செய்து வந்தால் எந்த அளவுக்கு எனில் ஹதீஸில் வருகிறது. ஓரிடத்தில் சண்டை சச்சரவு ஏற்பட்டால் எந்தப் பதிலும் தராமல் நான் நோன்பாளி என்று சொல்லி அமைதியாக இருந்துவிட வேண்டும். அதாவது நான் ஒரு பயிற்சியில் உள்ளேன். இறைக்கட்டளையை எனது வாழ்வின்

ஒரு பகுதியாக்க முயற்சி செய்து வருகிறேன். இவ்வாறு செய்யும் போது அம்மனிதர் இறைதிருப்தியைப் பெறுவார். அம்மனிதர் நெருப்பிலிருந்து ஈடேற்றம் பெற்று விடுகிறார். அவனது ஜன்னத்தில் நுழைந்து விடுகிறார்.

நான் ஆரம்பத்தில் ஒரு ஹதீஸினை கூறினேன். அதன் விளக்கத்தில் இவ்வாறும் வருகிறது. ஒருவர் நல்ல வேலையை இம்மாதத்தில் செய்தால் அவர் ஒரு பர்ளை செய்தவர் போன்றவராவார். இம்மாதத்தில் ஒருவர் ஒரு பர்ளை செய்தால், ரமலான் அல்லாத மாதத்தில் எழுபது பர்ளை செய்தவர் போன்றவராவார். ரமலானின் மாதம் பொறுமையின் மாதமாகும். பொறுமையின் கூலி சொர்க்கமாகும். இது அடுத்தவரின் துன்பத்தில் பங்கெடுக்கும் மாதமாகும். அடுத்தவருடன் மென்மையாக நடந்து கொள்ளுதல், அடுத்தவரை மன்னித்தல், ஒருவருக்கொருவர் அன்பு, நேசம் காட்டுதல், சகோதரத்துவம் நிலைநாட்டுதல், அடியாருக்குள்ள கடமையை நிறைவு செய்தல் இவை அனைத்தும் அமலே சாலிஹா செய்தலின் பக்கம் இட்டுச் செல்கிறது. இவை அனைத்தையும் ஒருவர் செய்யும்போது நபி (ஸல்) அவர்கள், அவரை நெருப்பிலிருந்து விடுதலை பெற்றவர் என்ற நற்செய்தியைக் கூறியுள்ளார்கள். தொடர்ந்து நன்மையை நிலைநாட்டுதல், இறைகட்டளைகளை அமல் செய்வது, தனக்கு எதிராக நடைபெறும் அநீதிகளை பொறுத்ததன் விளைவாக அல்லாஹ்வும் ரஸூலும் அவருக்கு சொர்க்கத்தைப் பற்றி நற்செய்தி தருகின்றனர். பொதுவாக ரமலானில் பாகிஸ்தானிலும், மற்ற நாடுகளிலும் இந்த பெயர்தாங்கி ஆலிம்கள் பொதுமக்களுக்கு தவறான வழிகாட்டுகின்றனர். அஹ்மதிகளுக்கு அநீதியிழைப்பதற்கு புதுப்புது வழிகளை உருவாக்குகின்றனர்.

நான் ஏற்கனவே சென்ற குத்பாவில் கூறினேன். உணர்வுரீதியாகவும், பொருள், உயிர் நஷ்டங்களையும் ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகின்றது. ஆனால், நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் செய்த போதனை பொறுமையை ஒருபோதும் கைவிடக்கூடாது என்பதாகும். பிறகு ரமலானில் குறிப்பாக மூஃமின்களில் நற்செயல் செய்து பொறுமையைக் காட்டக்கூடியவர்களுக்கு அல்லாஹ்வும், ரஸூலும் சொர்க்கத்திற்கான நற்செய்தியைத் தருகின்றனர். எனவே, குறிப்பாக ஒவ்வொரு அஹ்மதியும் துஆ, இஸ்திக்ஃபார், நஃபில்கள், பொறுமை மூலம் இறைதிருப்தியையும், சொர்க்கத்தையும் அருகில் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும். அத்தகைய அமல் செய்பவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்.

**வஜஸாவுஹும் பிமா சபரு ஜன்னத்தவ் வஹரினா** – அவர்கள் நற்செயலில் நிலை நின்று பொறுமை காட்டியதனால் சொர்க்கத்தின் பட்டு வழங்கப்படும்.

இன்று அஹ்மதிகளுக்கு அநீதியிழைக்கப்படுகிறது. நம்மில் ஒவ்வொருவரும் அறிவோம். அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வதாலும், வரக்கூடிய இமாமை ஏற்றதனாலும் இந்த அநீதியிழைக்கப்படுகிறது. எனவே இந்த எதிரிகள் அநீதியிழைக்க விட்டு விடுங்கள். பொறுமை செய்யுங்கள் அதன் மூலமே நாம் அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுபவராவோம். அநீதியிழைப்போருக்கு அல்லாஹ் எச்சரிக்கை செய்துள்ளான். குர்ஆன் முழுவதும் அதனால் நிறைந்துள்ளது. அல்லாஹ் இந்த நெருப்பை மூட்டுபவருடன் எப்படி நடந்து கொள்வது என்பதை மிகவும் நன்றாக அறிவான். ஆனால் இந்த நாட்களில் நமது கடமை, மனித நேயத்திற்காக குறிப்பாக முஸ்லிம் உம்மத்திற்காக கருணை காட்டப்பட துஆ செய்யுங்கள். இவ்வளவு அநீதிகளுக்குப் பிறகு துஆ செய்ய முடியாது என்று சில அஹ்மதிகள் நினைக்கின்றனர். ஆனால் நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். முஸ்லிம்கள் பெரும்பாலார் மார்க்க விஷயத்தில் நல்ல வேகம் உள்ளவர்கள் போன்று தெரிந்தாலும் மார்க்க அறிவு விஷயத்தில் முற்றிலும் அறியாதவர்களாகவும் அல்லது சாதாரண அறிவு மட்டும் உள்ளவர்களாகவும் அல்லது உலமாக்களுக்குப் பயந்து கொண்டிருப்பவர்களாகவும் உள்ளனர். இந்த பெயர்தாங்கி உலமாக்கள் இவர்களை தவறான வழியில் நடத்துகின்றார்கள்.

எனவே ரமலானில் இந்த கடைசி பத்தில் பொறுமை காட்டியவாறு, துஆ மற்றும் நஃபில் வணக்கங்களில் கவனம் செலுத்தி, இஸ்திக்ஃபார், தவ்பா செய்தவாறு, நற்செயல் செய்தவாறு, எப்போதும் தக்வாவில் செல்வதாக உறுதி எடுத்தவாறு நரக நெருப்பிலிருந்து விலகி ஜன்னத்திற்கு அருகில் செல்ல முயற்சி செய்யுங்கள்.

நாம் இந்த ரமலானிலிருந்து பயனடைந்தவாறு இறைவன் பாராட்டிக் கூறிய மக்களில் சேர முயற்சி செய்ய வேண்டும். அவர்களைப் பற்றி இறைவன் கூறுகின்றான்.

உஸலிபத்துல் ஜன்னத்து பில் முத்தகீன கைர பஇது. சொர்க்கம் முத்தகீகளுக்கு அருகில் கொண்டு வரப்படும். தூரத்தில் இருக்காது. இதுவே உமக்கு வாக்களிக்கப்பட்டது.

இது, இறைவன் முன் குனியும் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட வாக்குறுதியாகும். தமது அஃமாலை பாதுகாத்து வருபவருக்கு இறைவன் தந்த வாக்குறுதியாகும். இறைவன் தந்த ஷரீஅத் கட்டளையின்படி அமல் செய்தவர்களுக்கு இறைவன் அளித்த வாக்குறுதியாகும். அல்லாஹ்வும் ரஸுலும் இந்த ரமலானை எப்படி கழிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். அப்படி கழிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் இந்த கடைசி பத்திலும் நம்மை பரக்கத்துகளை நெருங்கி இறைவனது திருப்தியைப் பெற்றவர்களாக, அவனது ஜன்னத்தில் நுழைபவர்களாக ஆக்குவானாக. நற்செயல் செய்ய தவ்ஃபீக் வழங்குவானாக.

இன்று ஜுமுஆவிற்குப் பிறகு ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். சென்ற முறை நான் விண்ணப்பித்து இருந்தேன். நமது சகோதரர் சேக் செய்யது அஹ்மத் சாஹிப் தமது கடையில் இருக்கும் போது விஷமிகளால் சுடப்பட்டு படுகாயப்படுத்தப்பட்டார்கள். அவர் 12 நாள்கள் மருத்துவமனையில் அனுமதித்த பிறகும் அவரது உயிரை மீட்க இயலவில்லை. இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். ஷஹாதத்தின் தகுதியைப் பெற்று விட்டார். இந்த ஷஹீதும் தமது இளம் வயதில் தமது இரத்தத்தை இறைவழியில் அர்ப்பணித்துள்ளார். சென்ற வருடம்தான் அவருக்கு திருமணம் நடந்தது. அவர் மருத்துவமனையில் இருக்கும் போதுதான் அவரது முதல் குழந்தை பிறந்தது. பெண் குழந்தை பிறந்ததாக அவருக்கு மருத்துவமனையில் சொல்லப்பட்டது. அவரால் பதில் ஏதும் கூறமுடியவில்லை. கண்களிலிருந்து கண்ணீர் மட்டும் வழிந்தது. அவரது குடும்பத்தில் முதலிலும் மூன்று ஷஹாதத்துகள் நடந்துள்ளன. இவரது தநதை சேக் சாஹிபும் அஹ்மதிய்யத்தின் காரணத்தால் விஷம் கொடுக்கப்பட்டு கொல்லப்பட்டார். இவரது சகோதரர் சேக் முஹம்மது ரஃபீக் சாஹிப் அவரது மாமு சேக் முபஷ்ஷர் அஹ்மத் சாஹிப் இருவரும் சுடப்பட்டனர். சேக் முஹம்மத் அஹ்மத் இவ்வருட ஆரம்பத்தில் சுடப்பட்டார்.

சேக் செய்யது சாஹிப் அவர்களும் நல்ல இயல்புள்ளவர். அவர்களது முகத்தில் எப்போதும் புன்னகை தவழ்ந்து கொண்டிருக்கும். மிகவும் தூய்மையான மார்க்கத் தொண்டராவார். தஃவத்தே இலல்லாஹ் (இறைவன் பக்கம் மக்களை அழைத்தல்) –ல் நலல ஆர்வம் உள்ளவர். 1990 ஆம் ஆண்டு மவ்லவிகளுக்கு எதிராக செயல்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். அவரது தாயாருக்கு வயது 72. முதுமையில் அவருக்கு இது பெரிய துயரமாகும். அனைவரையும் துஆவில் நினைவில் கொள்ளுங்கள்.

சென்ற குத்பாவில் ஷஹீதுகளைப் பற்றி கூறும்போது டாக்டர் மன்னான் சித்திகி சாஹிப் பற்றி கூறினேன். அவரது பிரபலம் மற்றும் பல பணிகளின் காரணத்தாலும் மிர்புர்காஷ் அமீராக இருந்ததாலும் பல பேருக்கு தெரிந்த ஆளாக இருந்ததால் அவரைப் பற்றி அதிகமாக குறிப்பிட்டேன். ஷஹாதத் இருவருமே பெற்றனர். யார் பெரியவர் என்பதனை அல்லாஹ்வே அறிந்தவன். கடந்த நாட்களில் எமக்கு சில அனுதாப கடிதங்கள் வந்தன. அதில் பல படித்தவர்கள்கூட டாக்டர் சாஹிபை பற்றி குறிப்பிட்டனர். ஆனால் அனுதாபம் தெரிவிப்பதாயின் இருவரைப் பற்றியும் தெரிவித்து இருக்க வேண்டும். சேட் சாஹிபும் கூட எனக்கு மிகவும் அறிமுகம் ஆனவர்தான். நல்ல இயல்பு கொண்டவர். நல்ல வேலை செய்யக்கூடியவர். மார்க்கப் பணியில் ஆர்வமுள்ளவர். பலமுறை நவாப் ஷா என்ற அவரது ஊருக்கு சென்றுள்ளேன். பலமுறை சென்றுள்ளேன். என்னை சந்திக்க வருவார். ஜமாஅத் விஷயத்தில் ஆலோசனை வழங்குவார். அமல் செய்ய முயற்சி செய்வார். இது குறித்து நான் சிறிது கூற விரும்புகிறேன்.

இரண்டாவது காயிப் ஜனாஸா நமது இனிய சகோதரி மர்வா குலுவத் சஹிபா. ஒரு சாலை விபத்தில் அடிபட்டு கொஞ்ச நாள் மருத்துவமனையில் இருந்தார். இவரது கார் மீது பின்னால் இருந்து டிரக் மோதியதால்

இவர் வஃபாத் ஆகி விட்டார். வயது 34. இன்னாலில்லாஹ் வஇன்னா இலைஹி ராஜிஊன். இவர் நமது ஒவ்வொரு சிக்கலான வேலைகளையும் செய்து வந்தார். அல் இஸ்லாம் இணையதளத்தில் ஸக்காத் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை அரபியில் வெளியிட்டு அதனை மொழியாக்கமும் செய்து வெளியிட்டுள்ளார். அப்பணி முடிவடைந்து அது நூல்வடிவம் பெற இருந்தது. நல்ல தூய பெண்மணி. தக்வா உள்ளவர். மார்க்க உணர்வு உள்ளவர். மற்ற இடத்தில் வேலை வாங்கிக் கொண்டு செல்லலாமே என்று பலரும் கூறியபோதும் எனக்க மார்க்கப் பணியே போதும் என்று கூறிவிட்டார். அல்லாஹ் அவருக்கு மக்ஃபிரத்து வழங்குவானாக. அவரது தகுதியை உயர்த்துவானாக. பின்னால் விட்டுச் சென்றுள்ள அவரது உறவினர்களுக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

மூன்றாவது ஜனாஸா காயிப் சாமித்தக் சாஹிப். சில நாட்களுக்கு முன்னர் வஃபாத் ஆனார். இவர் பாலஸ்தீனினின் ஒரு தூய அஹ்மதியாகிய கிதர் கதக் சாஹிபின் மகன். இள வயதிலேயே மிகவும் மார்க்க உணர்வுள்ளவர். 1996-ல் லண்டன் ஜல்ஸாவுக்கு வந்திருந்தார். அப்போது நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் சந்திப்பு ஏற்பட்டது. ஹுஸுர் ரஹிமஹுல்லாஹு அவர்களின் கனிவான நடைமுறையைப் பார்த்து அவரது ஈமானும் இக்லாஸும் மேலும் அதிகரித்தது. நாட்டுக்கு திரும்பியதும் தனக்கு சொந்தமான ஓர் இடத்தை எந்த விலையும் பெற்றுக் கொள்ளாமல் ஜமாஅத்திற்கு தந்து விட்டார். ஜமாஅத்திற்கு இவ்விடத்தை தருகிறேன். ஒரு பைசா கூட வாங்க மாட்டேன். ஜல்ஸாவுக்கு வந்த பிறகு தான் அஹ்மதிய்யத் என்றால் என்ன? என்று தெரிய வந்தது என்று கூறிக் கொண்டிருந்தார். நல்லியல்பு கொண்டவர். தேவை உள்ளவர்களுக்கு உதவி வந்தார். அல்லாஹ் அவரது தகுதியை உயர்த்துவானாக. அவரது குழந்தைகளுக்கும் அல்லாஹ் அஹ்மதிய்யத்தின் ஒளிகொண்டு வழி காட்டுவானாக. அவர்களும் ஜமாஅத்தில் இணையட்டுமாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 19.09.2008**

Translated by : **Muallim M. Nisamudeen Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**